28636

திருவள்ளுவரும் - -

திருக்குறளும்

20333

20333

ஆசிரியர் :

மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி

டாக்டர். உ. வே. சாமிநாதையர்

சென்னை :

கார்டியன் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பெற்றது

Copyright Registered] 1936 [விலை அணா மூன்று.

திருவள்ளுவரும் - -
- - திருக்குறளும்

திருக்குறளின் வியாபகம்

திருவள்ளுவரையும் அவரது திருக்குறளை யும் பாராட்டாத புலவர்கள் இலர். தமிழ் மணம் எங்கெங்கே உண்டோ அங்கெல்லாம் திருக்குறளின் நறுமணம் வீசிக்கொண்டே யிருக்கும்; தமிழ் மணம் வீசாத இடத்திலும் திருக்குறளின் மணம் வீசுகின்றதென்று கூறு தலே பின்னும் பொருத்தமாகத் தோற்று கின்றது. ஏனெனின், தமிழ் வழங்காத பிற நாடுகளிலுள்ள அறிஞர்கள் திருக்குறளின் மொழிபெயர்ப்புக்களைப் படித்து இன்புறு கிறார்கள். அங்கே தமிழ்மணம் ஏது? நாமெல் லாம் தமிழை யறிந்து அதன் மூலம் குறளை அறிகின்றோம். அவர்களெல்லாம் குறளின் பொருளை அறிந்து அதன் மூலம் தமிழைப்பற்றி அறிந்துகொள்ளுகிறார்கள். இதனால் தமிழைக் காட்டிலும் குறளுக்கு வியாபகம் அதிகமாக இருப்பதை அறிகிறோமல்லவா?

குறளின் வடமொழி மொழிபெயர்ப்பு

குறளைப் போன்றதொரு நூல் வேறு எந்த மொழியிலும் இல்லையென்று பல மொழிகளை அறிந்தவர் கூறுகின்றனர். பல மொழிகளில் இதனை மொழிபெயர்த்திருக்கின்றார்கள். வடமொழியில் அறத்துப்பாலை மாத்திரம் மொழிபெயர்த்து 'நீதிகுஸுமமாலா' என்று ஒருவர் வெளியிட்டிருக்கின்றார். அதனையன்றிக் குறள் முழுவதையும் என்னுடைய நண்பராகிய தியாக சமுத்திரம் ஸ்ரீ சக்கரபாணி ஐயரென்பவர் பல வருஷங்களுக்கு முன்பு வடமொழிச் சுலோகங்களாக மொழி பெயர்த்தமைத்திருக்கின்றார். அப்புத்தகம் இன்னும் அச்சிடப்படவில்லை.

திருவள்ளுவர் வரலாற்றுச் செய்திகள்

இத்தகைய சிறந்த நூலை இயற்றிய திருவள்ளுவரது வரலாறு ஒரு வரையறையாக வழங்கப்படவில்லை. அவருடைய பிறப்பைப் பற்றியும், சாதியைப் பற்றியும், சமயத்தைப் பற்றியும், தொழிலைப் பற்றியும், ஆச்சிரமத்தைப் பற்றியும், ஒன்றுக்கொன்று வேறுபாடான செய்திகள் தமிழ்நாட்டில் உலவுகின்றன. அவற்றை ஆராய்ந்து அறுதியிடுதற்குரிய கருவிகள் போதியனவாகக் கிடைக்கவில்லை. இக்குறை திருவள்ளுவர் திறத்தில்மட்டுமே அமைந்ததன்று; பெரும்பாலான

தமிழ்ப்புலவர்களுடைய வரலாறுகள் இத் தகையனவே.

திருவென்னும் அடை

பலவகையான கொள்கையினரும் திருவள்ளுவரைத் தங்கள் தங்களைச் சார்ந்தவராகக் கூறுவதும் தங்கள் கூற்றுக்கு ஆதாரங்களை எடுத்துக் காட்டுவதுமாகிய இவை இப் புலவர் பிரான் எல்லோராலும் விரும்பப்படும் சிறப்பினரென்பதைத் தெரிவிக்கின்றன. சங்க காலத்துப் புலவர்களையும் நூல்களையும் முற்காலத்தினரும் பிற்காலத்தினரும் வழங்கும்போது திரு வென்னும் அடைகொடுத்து வழங்கியதாகக் காணேம். ஆயினும் வள்ளுவரையும், குறளையும் திருவள்ளுவரென்றும், திருக்குறளென்றும் கூறுகின்ருேம். * திருவென்பதற்குத் திருக்கோவையாரின் உரையில் பேராசிரியர், கண்டாரால் விரும்பப்படும் தன்மைநோக்கமென்று உரைகூறுகின்ருர். வள்ளுவரும் அவர் வாய்மொழியும் யாவராலும் ஒருங்கே விரும்பப்படுவதனுல் திரு வென்னும் அடை மிக்க பொருத்தமுடையதே. இவருக்கு அமைந்த பலபெயர்கள் இவருடைய சிறந்த இயல்புகளை வெளிப்படுத்துகின்றன.

திருவள்ளுவர் - ஆகுபெயர்

திருவள்ளுவரைப் பற்றிய வரலாறுகள்

* திருச்சிற்றம்பலக் கோவையார், 1, உரை.

ஒருபால் இருப்ப, நமக்கு இப்பொழுது பயன் படுவது திருக்குறளாகிய திருவள்ளுவரேயாம். தமிழில் கருத்தாவாகுபெயருக்கு உதாரணமாகத் திருவள்ளுவரென்பதையன்றி நூல் வழக்கில் வேறு ஆட்சி இப்பொழுது கிடைக்கவில்லை. அகத்தியம், தொல்காப்பிய மென்பன ஈறுதிரிந்த பெயர்களாக உள்ளன. ஆசிரியர் பெயரை உள்ளவாறே கூறி நூலை உணர்த்தும் இயல்பு அவற்றிற்கு இல்லை. எனவே, திருக்குறளைப்பற்றிப் பேசினாலும், ஆகுபெயர்ப் பொருளால் திருவள்ளுவரைப் பற்றிப் பேசியதாகவே அமையும்.

சிறப்பியல்புகள்

ஏனைய தமிழ்நூல்களிற் காணப்படாத சில சிறப்பியல்புகள் திருக்குறளுக்கு உண்டு. நூற்பயனாகிய அறம் பொருள் இன்பம் வீடு என்பவற்றைத் தெளிவாகக் கூறிய நூல்களுள் குறளுக்கு ஈடானது வேறு இல்லை. சங்கமருவிய பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு என்பவற்றுள் திருக்குறளைப்போல 1330 செய்யுட்களையுடைய நூல் வேறொன்று இல்லை; குறட்பாவில் அமைந்ததும் இல்லை.

திருக்குறள் தமிழ்ச் செய்யுட்களில் முதற் பாவாகிய வெண்பாவில் முதல் வகையாகிய குறட் பாக்களாலாகிய சிறப்புடையது; இச்

சிறப்பே இந்நூலுக்குப் பெயரைத் தந்தது. பழையகாலத்து நூல்களில்நாலடியாரும், ஆசிரிய மாலையும், கலித்தொகையும், பரிபாடலும், பட்டினப் பாலையாகிய வஞ்சிநெடும்பாட்டும் யாப்பாற் பெயர் பெற்றன. ஆயினும் நாலடியாரை யன்றி எத்தனையோ நாலடிப்பாட்டுக்கள் உள்ள நூல்களும், ஆசிரிய மாலையை யன்றி வேறுபல ஆசிரியப்பா நூல்களும், கலித்தொகையை யன்றிக் கலிப்பாவால் அமைந்த நூல்களும் முற்காலத்து இருந்தன; முதற் சங்கத்தில் எத்தனையோ பரிபாடல் நூல்களும், பல வஞ்சிப்பாட்டுக்களும் இருந்தனவென்று அறிகிறோம். ஆனால், குறட்பாக்களால் வேறு ஒரு பெரிய இலக்கிய நூல் முன்பு இருந்ததாகத் தெரியவில்லை. இலக்கண நூல்கள் மட்டும் சில இருந்தன வென்று யாப்பருங்கல விருத்தியால் தெரிகின்றது.

திருவள்ளுவமாலை

திருக்குறளைப் பாராட்டும் திருவள்ளுவ மாலை யென்ற ஒரு நூல் இருக்கின்றது. அதிலுள்ள செய்யுட்களைப் பல புலவர்கள் பாடியுள்ளார்கள். அந் நூலைப் பாடியவர்கள் யாராயினும் அது பல நூற்றாண்டுகட்கு முன்பே உண்டாயிற் றென்பதற்கு * நேமிநாதவுரை

* நேமிநாதம், சொல்லதிகாரம் 5-ஆம் சூத்திரத்தின் உரையில், திருவள்ளுவ மாலையிலுள்ள "உப்பக்க நோக்கி" 'என்ற செய்யுள் உதாரணமாகக் காட்டப்பட்டுள்ளது.

முதலிய நூல்களிற் போதிய ஆதாரம் இருக்கின்றது. இங்ஙனம் ஒரு நூலைச் சிறப்பித்துப் பாடிய தனி நூலொன்று வேறு எந்த நூலுக்கும் முற்காலத்து அமையவில்லை.

உரைகள்

திருக்குறளுக்கு உரைவகுத்தவர் பதின்மரென்று ஒரு தனிப்பாடல் கூறுகின்றது:

“ தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர்
பரிமே லழகர் பருதி—திருமலையர்
மல்லர் பரிப்பெருமாள் காளிங்கர் வள்ளுவர்நூற்
கெல்லையுரை கண்டா ரிவர்”

என்பது அப்பாடல். இங்ஙனம் பதின்மர் உரையெழுதிய நூலும் வேறொன்று இல்லை. அந்தப் பதின்மருடைய உரைகளும் இக்காலத்தே கிடைக்கவில்லை. இப்பொழுது கிடைக்கும் உரைகளுள் பரிமேலழகர் உரையே மிகச் சிறந்தது. மணக்குடவர் உரையும் இக்காலத்து வழங்குகின்றது. * பரிப் பெருமாளென்பவரது உரையொன்று சிலர்பால் உண்டென்று தெரிகிறது. இப்பதின்மர் உரைகளை யன்றி வேறு சில பழைய உரைகளும் இந்நூலுக்கு உண்டு.

இந்நூலுக்கு நேரே உரை இயற்றினர்

---

*இவரைப் பற்றிய செய்திகளை ஸ்ரீ பாஷா கவிசேகர மகாவித்வான் ரா. இராகவையங்காரவர்கள் எழுதிய ‘சேது நாடுந் தமிழும்’ என்னும் புத்தகத்தால் அறியலாம்.

இங்ஙனம் பலராக, வேறு பல உரையாசிரியர் கள் தாங்கள் எழுதிய பிற நூலுரைகளிலே வாய்ப்பு நேர்ந்த இடங்களில் திருக் குறட்பாக் கள் சிலவற்றிற்கு உரையிட்டுச் செல்கின்ற னர். பேராசிரியர், நச்சினார்க்கினியர், சிலப் பதிகார அரும்பதவுரை யாசிரியர், அடியார்க்கு நல்லார் முதலியவர்களுடைய உரைகளில் சில குறள்களுக்கு உரைகளைக் காணலாம். அவர் கள் கூறும் உரைகளிற் பரிமேலழகருரையோடு மாறுபட்ட பகுதிகளும் உண்டு. ஒரு நூலின் ஆசிரியர் காலத்திலேயே அதற்கு உரை அமைந்திருப்பின் இத்தகைய மாறுபாடுகள் உண்டாகக் காரணமில்லை. பிற்காலத்தில் வந்த உரையாசிரியர்கள், நூலாசிரியருடைய கொள்கையை முற்றும் உணர்தல் இயலாது. ஆதலின் அவர்களுடைய உரைகளிற் சில மாறு பாடுகள் இருத்தல் கூடும். அவர்கள் செய்த பனைத்துணை நன்றியினால் தினைத்துணையாகிய அம்மாறுபாடுகளை நாம் மறந்து விடுகின்றோம்.

சங்கர நமச்சிவாயர் நன்னூலுரையில் * இசையெச்சம் என்னும் இலக்கணத்திற்கு உதாரணமாக, "இணரெரி தோய்வன்ன" என் னும் திருக்குறளை எடுத்துக்காட்டி மிக அழகாக விரிவுரை எழுதியிருக்கின்றார்.

* சூத்திரம், 360.

செய்யுளுருவ உரைகள்

ஒரு செய்யுள் நூலுக்கு வசனத்தில் உரை இயற்றுவதோடு செய்யுளுருவத்திலேயே உரை இயற்றுவதும் உண்டு. இது வடமொழியிற் பெருவழக்கு. தமிழ்நூல்களிலும் சிவஞானபோதத்துக்குரிய உதாரண வெண்பாக்களும், சித்தியார் முதலியனவும் உரை நிலையிலேயே உள்ளன. தேவாரப் பதிகங்களில் திருப்பாசுரம் முதலிய சிலவற்றிற்குப் பெரிய புராணத்தில் சேக்கிழார் உரை விரித்துச் செல்கின்றார். இவற்றைப் போலவே திருக்குறளுக்கும் செய்யுளுருவத்தில் உரையுண்டு. தனியே குறளுரையென்னும் பெயர் பெறாவிட்டாலும் அவை உரைகளின் தன்மையை உடையனவே.

இரங்கேச வெண்பா, சிவசிவ வெண்பா, தினகர வெண்பா, வடமலை வெண்பா, சோமேசர் முதுமொழி வெண்பா முதலியன திருக்குறளுக்கு உதாரணம் கூறும் நூல்கள். உரை வகைகளிலே உதாரணம் கூறுதலும் ஒன்று. ஆதலின் முற்கூறிய நூல்கள் திருக்குறளின் உரை நூல்களென்றே கூறல் தகும். சினேந்திர வெண்பா வென்னும் ஒரு நூல் சைனப் பெரியாரொருவரால் இயற்றப்பட்டதென்றும், அதில் ஒவ்வொரு குறளுக்கும் ஒவ்வொரு வரலாறு உதாரணமாகக் காட்டப் பெற்றுள்ளதென்றும், 1330 குறளுக்கும் 1330 வெண்பாக்

கள் அந் நூலில் உள்ளன வென்றும், பல வருஷங்களுக்குமுன் வேதாரண்யத்திலிருந்த சைன நண்பரொருவர் கூறக் கேட்டிருக்கின்றேன்; அவர் அந் நூலிலுள்ள சில வெண்பாக்களையும் சொல்லிக் காட்டினர். முதுமொழி மேல்வைப்பு என்று ஒரு நூல் உள்ளது. அதில் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பா லென்னும் மூன்றுக்கும் திருக்குறளாகிய திருவள்ளுவப் பயனையும், வீட்டுப் பாலுக்குச் சித்தாந்த சாத்திரமாகிய திருவருட் பயனையும் அமைத்த செய்யுட்கள் உள்ளன.

இவற்றையன்றித் தமிழ் நூலாசிரியர்கள் பலர் திருக்குறட்கருத்துக்களை மனத்திற்கொண்டு அவற்றிற்கு உரை கூறுவார் போலத் தம் நூல்களிற் பல செய்யுட்களை அமைத்திருக்கின்றார்கள்:

" ஆன்முலை யறுத்த வறனி லோர்க்கும்
மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்
பார்ப்பார்த் தப்பிய கொடுமை யோர்க்கும்
வழுவாய் மருங்கிற் கழுவாயு முளவென
நிலம்புடை பெயர்வ தாயினு மொருவன்
செய்தி கொன்றோர்க் குய்தி யில்லென
அறம்பா டிற்றே யாயிழை கணவ "

என்னும் புறநானூற்று அடிகள்,

" எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு "

என்னும் அருமைக்குறளின் விரிவுரையைப் போல விளங்குதல் கவனிக்கத்தக்கது. அக்

குறளுக்கு உரைவகுத்த பரிமேலழகர், ‘எந் நன்றி கொன்ருர்க்கும்’ என்பதற்கு, ‘பெரிய அறங்களைச் சிதைத்தார்க்கும்’ என்று பதவுரை எழுதிவிட்டு, விசேடவுரையில், ‘பெரிய அறங்களைச் சிதைத்தலாவது ஆன்முலை யறுத்தலும், மகளிர் கருவினைச் சிதைத்தலும், பார்ப்பார்த் தப்புதலும் முதலிய பாதகங்களைச் செய்தல்’ என்று எழுதினுர். முற்கூறிய புறநானூற்றின் அடிகளையே அவர் எளிதில் உரை நடையிற் கூறியிருத்தல் காண்க.

“இடுக்கண் வருங்கால் நகுக அதனை, அடுத்தூர்வ தஃதொப்ப தில்” என்னும் குறளுக்கு உரைபோல,

“ இடுக்கண்வந் துற்ற காலை யெரிகின்ற விளக்குப் போல
நடுக்கமொன் றுனு மின்றி நகுகதாம் நக்க போழ்தவ்
விடுக்கணை யரியு மெஃகா மிருந்தழு தியாவ ருய்ந்தார்
வடுப்படுத் தென்ன யாண்மை வருபவந் துறுங்க
[ளன்றே ”

என்னும் சிந்தாமணிச் செய்யுள் அமைந்திருக்கின்றது.

“ தொழுததங் கையி னுள்ளும்
துறுமுடி யகத்துஞ் சோர
அழுதகண் ணீரி னுள்ளும்
அணிகலத் தகத்து மாய்ந்து
பழுதுகண் ணரிந்து கொல்லும்
படையுட னெடுங்கும் பற்று
தொழிகயார் கண்ணுந் தேற்றம்
தெளிகுற்றுர் விளிகுற் ருரே ”

என்னும் சிந்தாமணிச் செய்யுள்,

" தொழுதகை யுள்ளும் படையொடுங்கும் ஒன்னார்
அழுதகண் ணீரும் அனைத்து "

என்னும் குறளின் விரியென்று கூறலும் வேண்டுமா ?

" வாய்மை யெனப்படுவ தியாதெனின் யாதொன்றும்
தீமை யிலாத சொலல் "

என்னும் குறளுரையில் பரிமேலழகர், 'அதுதானும், தீங்கு பயவாதாயின் மெய்ம்மையாம், பயப்பிற் பொய்ம்மையாம்' என்று எழுதியுள்ளார். வாய்மைச் சொல்லும் தீங்கு பயப்பதாயின் பொய்ம்மையாகுமென்று அவர் வசனத்தாற் கூறிய இவ்வுரையையே வேறு வகையில் அழகிய செய்யுளுருவத்தில் சிவப்பிரகாச சுவாமிகள்,

" வாய்மை யெனினும் புலரியைக்
கூறுதல் வாரணங்காள்
சேய்மை யறுநங் கொழுநர்தங்
கூட்டஞ் சிதைத்தெமக்குத்
தீமை பயந்தமை யால்வெங்கை
நாயகர் செய்தவறத்
தூய்மை யுணர்ந்தவர் வாய்மையன்
றுமெனச் சொல்லுவரே "

என்று அமைத்திருக்கின்றனர்.

விநாயகபுராணம், அரசியற் படலத்தில் குறட்பாக்கள் பலவற்றிற்கு உரை காணலாம்; இங்ஙனம் அமைந்த தமிழ் நூற்பகுதிகள் அளவில.

பிற சிறப்புக்கள்

குறட் கருத்துக்களை எடுத்தாளாத தமிழ் நூலே இல்லையென்று கூறுவது மிகையாகாது. தமிழ்ப்புலவர்கள் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட நூல்களில் திருக்குறளே முதன்மை வாய்ந்த தென்பதில் ஐயமில்லை. நீதிநெறி விளக்கம் குறட் கருத்தைச் சுருக்கமாக வேறு உருவத்தில் அமைத்துச் சொல்லும் நீதிநூலாகும். கும்பகோணம் காலேஜில் தமிழ்ப் பண்டிதராக இருந்த ஸ்ரீமான் சி. தியாகராஜ செட்டியார் அந்நூலை, "இது குறள் பருவத்தில் பெற்ற பிள்ளையைப் போன்றது" என்பர்.

திருக்குறள் தமிழுக்குச் சிறப்பாக அமைந்த நூலென்பது, "அகரமுதல" என்று தமிழ் நெடுங் கணக்கின் முதலாகிய அகரத்தில் தொடங்கி, 'ஊடுதல் காமத்துக் கின்ப மதற் கின்பம், கூடி முயங்கப் பெறின்" என்று ஈறாகிய னகரத்தில் முடிந்தமையால் பெறப்படுகின்றது.

தமிழ் என்னும் சொல்லில் ழகரமாகிய தமிழ்ச் சிறப்பெழுத்து ஒன்று அமைந்திருப்பது போலக் குறள் என்பதில் றகரமாகிய சிறப்பெழுத்து அமைந்திருக்கின்றது.

ஏழில் ஒன்று

தமிழ் நூல்களிற் சிறந்தனவென்று சில நூல்களைத் தேர்ந்தெடுத்துத் தொகுத்துச் சிலர்

சில செய்யுட்களின் வாயிலாகத் தெரிவிக்கின்றனர். அவர்கள் தங்கள் தங்கள் மனத்துக்கு உவந்த சிலவற்றைக் கூறியிருத்தலின், ஒருவர் கருத்தோடு வேறொருவர் கருத்து வேறுபடுகின்றது. ஆயினும், அங்ஙனம் கூறும் பலருடைய செய்யுட்களிலும் திருக்குறளின் பெயர் காணப்படுகின்றது.

> " தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
> மூவர் தமிழும் முனிமொழியும்—கோவை
> திருவா சகமுந் திருமூலர் சொல்லும்
> ஒருவா சகமென் றுணர் "

என்பது நல்வழிப்பாட்டு. இதில், குறள், வேதாந்தம், தேவாரம், முனிமொழி, திருக்கோவையார், திருவாசகம், திருமந்திரம் என்னும் ஏழும் ஒரு தன்மையின வென்பது கூறப்பட்டிருக்கிறது. முனிமொழி யென்ற தமிழ் நூலொன்றை நான் திருமலைராயன் பட்டினத்திற் சில வீடுகளிற் பார்த்திருக்கிறேன். இதிற் கூறப்பட்ட ஏழுநூல்களில் குறள் தலைமை பெற்று விளங்குகின்றது.

ஆறில் ஒன்று

> " வள்ளுவர்சீ ரன்பர்மொழி வாசகந்தொல் காப்பிய
> தெள்ளுபரி மேலழகன் செய்தவுரை—ஒள்ளியசீர்த்[மே
> தொண்டர் புராணந் தொகுசித்தி யோராறும்
> தண்டமிழின் மேலாந் தரம்"

என்பது ஒரு சைவப்பெரியாரது வாக்கு.

தண்டமிழில் மேலாம் தரத்து நூல்களாகிய ஆறனுள் திருக்குறள் முதன்மை பெற்றுள்ளது.

நான்கில் ஒன்று

“ திருத்தக்க மாமுனிசிந் தாமணி கம்பர்
விருத்தக் கவித்திறமும் வேண்டேம்—உருத்தக்க
கொங்குவேண் மாக்கதையைக் கூறேங் குறளணுகேம்
எங்கெழிலென் ஞாயி றெமக்கு”

என்பதில் எதிர்மறை முகத்திறற் சிறப்பித்த நூல்கள் நான்கு. சீவக சிந்தாமணி, கம்பராமாயணம், பெருங்கதை, திருக்குறளென்னும் இவற்றுள் திருக்குறள் முடிபாக மிளிர்கின்றது.

மூன்றில் ஒன்று

பிறநூல்களால் விளங்காத விஷயங்கள் “தொல்காப் பியந்திரு வள்ளுவர் கோவையார், மூன்றினும் முழங்கும்” என்று இலக்கணக் கொத்துடையார் பாராட்டுகின்றார்; அவர் கூறும் மூன்று நூல்களில் திருக்குறள் நடுநாயகமாக உள்ளது.

இரண்டில் ஒன்று

“நாலும் இரண்டும் சொல்லுக் குறுதி” என்னும் பழமொழியில் நாலடியாரும் குறளும் குறிப்பிக்கப் படுகின்றன. இவ்விரண்டிலும் குறள் ஒன்றாக அமைந்திருக்கின்றது. இத்தகைய பெருஞ் சிறப்பை வேறு எந்த நூல் பெற்று விளங்குகின்றது?

திருமால் உவமை

திருக்குறளைத் திருவள்ளுவமாலை பலபடப் பாராட்டுகின்றது. அது வேதத்தைப் போன்றதென்றும், மூவேந்தர்முடியிற் சூடும் மாலைபோன்றதென்றும், முப்பாலில் நாற்பால் மொழிவதென்றும் சிறப்பிக்கின்றது. ஒரு செய்யுளில் குறளை அந்நூல் திருமாலோடு உவமிக்கின்றது. திருமால் தம் திருவடிகள் இரண்டாலும் புறத்தே தோன்றும் உலகத்தை அளந்ததுபோலத் திருக்குறள் தன் அடி இரண்டாலும் மக்களின் அகத்தே தோன்றுவனவற்றையெல்லாம் அளந்ததென்பது அச்செய்யுளின் கருத்து. துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் வெங்கையுலாவில் இங்ஙனமே இந்நூலுக்கும் திருமாலுக்கும் ஒப்புக் கூறுகின்றனர். அங்கே அவர் கூறும் பொதுத்தன்மை வேறு. திருவள்ளுவர் ஒரு பொருளை வற்புறுத்தும் பொருட்டுப் பத்துமுறை கூறியதுபோலத் திருமால் ஒருகருத்தை வற்புறுத்தப் பத்து அவதாரமெடுத்தாரென்பது அப்பகுதியின் கருத்து.

பிற புகழுரைகள்

சீத்தலைச் சாத்தனார் மணிமேகலையில் "பொய்யில் புலவன் பொருளுரை" என்று குறளைப் பாராட்டுகின்றார். சிவப்பிரகாசர் நவத் தமிழ் வேதமென்று போற்றுகின்றார். தமிழ்

விடுதூதென்னும் ஒரு பிரபந்தம் தமிழைக் குழந்தையாக உருவகம்செய்து வருணிக்கையில், "முப்பாலும், மிஞ்சப் புகட்ட மிகவளர்ந் தாய்'' என்று சொல்லுகின்றது. குழந்தையின் வளர்ச்சிக்குப் பால் எங்ஙனம் உதவுமோ, அங்ஙனமே தமிழின் வளர்ச்சிக்குக் குறள் மிக உதவுகின்றது என்னும் அரிய கருத்து இதனல் வெளியாகின்றது. இவ்வாறே குறளைப் பாராட்டிய நூற் பகுதிகளைத் தொகுத்துக் கூறுவதாயின், அது மிக விரியும்.

குறள் நூலமைப்பின் சிறப்பு

குறளைப் பற்றிப் புறத்தே காணப்படும் செய்திகளைக் கொண்டு இதுகாறும் சில கூறப்பட்டன. இனி இந்நூலின் அகத்தேயுள்ள செய்திகளாற் பெறப் படுவனவற்றைத் துணையாகக்கொண்டு சில சொல்ல விரும்புகிறேன்.

திருவள்ளுவருடைய நூல் மிகச் சிறந்த அமைப்புடையது. மிக அரிய விஷயங்களை வரையறைப் படுத்திச் சுருக்கமாக இந்நூல் கூறுகின்றது.ஒருபொருளின் இலக்கணத்தைக் கூறுதலும், அதன் இன்றியமையாமையை விளக்குதலும், அதனற் பெறப்படும் பயனை யறிவுறுத்தலும், அதனை நாம் மேற்கொள்ளுதற்குரிய தந்திரத்தை யுரைத்தலும், உலகத்தினுள்ள பொருள்களின் வாயிலாக உண்மையை நிரூபித்தலும், உவமைகளாலும் உதாரணங்

களாலும் பொருளைப் புலப்படுத்தலும் திருவள்ளுவர் வழக்கங்களிற் சில.

மக்கள் விலக்க வேண்டியவற்றைப் பெரும்பாலும் அவையஞ்சாமை, அழுக்காறுமை, இடுக்கணழியாமை, இன்னசெய்யாமை, கல்லாமை, கள்ளாமை, கள்ளுண்ணுமை, கொல்லாமை, சிற்றினஞ்சேராமை, பயனில சொல்லாமை, பிறனில் விழையாமை, புறங்கூறுமை, பெரியாரைப் பிழையாமை, பொச்சாவாமை, மடியின்மை, வெகுளாமை, வெஃகாமை, வெருவந்த செய்யாமை என்பனபோல் எதிர்மறை முகத்தாற் கூறுதல் இவர் இயல்பு.

ஒரு நீதியை உடம்பாட்டு முகத்தாலும் மறை முகத்தாலும் புலப்படுத்துவர். ஒரு நீதிக்கு மற்றொரு நீதியை உவமையாக வைத்து இரண்டையும் வற்புறுத்துவர். காமத்துப்பாலில் இடக்கர்ச் சொல்லே இல்லாமையும் பரத்தையிற் பிரிவை விளக்கமாகச் சொல்லாமையும் குறள் சிறந்த ஒழுக்க நூலென்பதைப் புலப்படுத்துகின்றன.

திருவள்ளுவரது கல்வி யார்வம்

குறளிலுள்ள பல பாக்களால் திருவள்ளுவர் கல்வியினிடத்தே மிக்க ஆர்வமுடையாரென்பதும் புலவர்கள்பால் குறையாத அன்

புடையவ ரென்பதும் பெறப்படும். கல்வியைப் பற்றிக் கூறவந்தவர் தாம் உரைக்கப் புகுந்த செய்திகள் பத்துக் குறளில் அடங்காமை பற்றிக் கல்வி, கல்லாமை, கேள்வியென்னும் மூன்று அதிகாரங்களால் உணர்த்துகின்றார். அன்றியும் அறிவுடைமை, சொல்வன்மை, அவையஞ்சாமை என்பனவும் கல்வியோடு தொடர்புடைய அதிகாரங்களே யாகும். இவ்வளவு மிகுதியாக வேறு எதனையும் இவர் வற்புறுத்தவில்லை. கல்லாதாரை விலங்குகளென்றும் குருடர்களென்றும் கூறும் வள்ளுவர் மதிநுட்பம் நூலோடுடையவரை மிகப் போற்றுகின்றார். பல நூல்களைப் படித்துப் படித்து அவ்வின்பத்திலே இவர் திளைத்திருக்க வேண்டுமென்று தோற்றுகின்றது. நிரம்பிய நூலின்றிக் கோட்டி கொள்ளலை வெறுக்கும் இப்பெரு நாவலர் பல நூல்களைப் படியாமல் இருத்தற்கு நியாயமில்லை யல்லவா? படிக்குந் தோறும் இன்பங் கண்டவராதலினாலேதான் இவர் பண்புடையாளர் தொடர்பினால் வரும் இனிமையை, 'நவில்தொறும் நூல்நயம் போலும்' என்னும் உவமையால் விளக்குகின்றார். அங்ஙனம் மேலும் மேலும் படிக்கப் படிக்கத் தோன்றும் நயத்தில் உள்ளம் உருகி, "இதுகாறும் இதனை அறிந்திலேமே" என்று இரங்கினர். இங்ஙனம் இப்பொதுமறைப் புலவர் இரங்கும் காட்சி,

" அறிதோ றறியாமை கண்டற்றாற் காமஞ்
செறிதோறுஞ் சேயிழை மாட்டு "

என்னும் காமத்துப்பாற் குறளைப் படிக்கும் போது நம் அகக் கண்ணுக்குப் புலனாக வில்லையா ?

பற்றற்று மெய்ப்பொருள் கண்டு பிறப் பறுக்கும் துறவற வியலிலும் அம் மெய்ப் பொருள் காண்டற்குக் கல்வி பெருந்துணையாகு மென்பதை,

" கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி "

என்று வற்புறுத்தும் திருவள்ளுவர் கல்வி யினும் சிறந்ததொரு பொருள் உலகத்தில் இருப்பதாக எண்ண இடமில்லை. அதனாலே தான் அதனைச் சாந்துணையும் கற்க வேண்டு மென்று விதிக்கின்றார்.

" யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு "

என்னும் குறளைக் காண்க. அங்ஙனம் கற்றவன் ஓரூருக்குமட்டும் உரியோனல்லன் ; ஒரு நாட்டுக்கு மட்டும் உரியோனல்லன் ; எல்லா ஊருக்கும் எல்லா நாட்டுக்கும் உரிய னென்ற கருத்துக்கள் இக்குறளில் அமைந் துள்ளன. இக்குறளுக்குத் திருவள்ளுவரையே உதாரணமாகக் கூறிவிடலாம். இவருடைய புகழுடம்பு இப்பொழுது இவ்வுலகத்துக்கே பொதுச் செல்வமாக நிலவுகின்ற தன்றோ ?

பலநூற் கல்வி

திருவள்ளுவர் பல மொழி நூல்களையும் பல சமய நூல்களையும் ஆராய்ந்தவரென்பதை அவற்றிலுள்ள கருத்துக்கள் திருக்குறளில் அங்கங்கே அமைந்து விளங்குவதனால் அறியலாம். அன்றியும், இவருடைய வாக்கிலிருந்தே இவர் மதி நுட்பம் நூலோடுடையவரென்பதை உணரலாம்.

நீத்தார் பெருமையை விளக்க வந்த தெய்வப் புலவர்,

> " ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
> வேண்டும் பனுவற் றுணிவு''

என்று அருளினர். இங்கே பனுவல்களின் துணிவு இதுவென்று அறுதி யிட்டுரைத்தமையால் அப்பனுவல்களை இவர் ஆய்ந்தறிந்தன ரென்பதற்கு இக்குறளே சான்று பகர்கின்றது;

> " பொச்சாப்பார்க் கில்லை புகழ்மை யதுவுலகத்
> தெப்பானூ லோர்க்குந் துணிவு''

என்ற குறள் உலகத்திலுள்ள பலவகைப் பட்ட கொள்கை யுடையார் நூல்களிலும் இப் பொய்யில் புலவர் அறிவுடைய ரென்பதைத் தெளிவுறுத்துகின்றது. அரணைப்பற்றி,

> " உயர்வகலந் திண்மை யருமையிந் நான்கின்
> அமைவர ணென்றுரைக்கு நூல்''

என்றமையால் இவர் பொருள்நூல்கள் பலவற்றை ஆய்ந்துள்ளவ ரென்பது புலப்படும்.

"நூலோர் வளிமுதலா வெண்ணிய மூன்று"

என்பதனுல் இவர் மருத்துவ நூல்களையும் ஆய்ந்தவராதலை யுணரலாம்.

தொல்காப்பியத்தை ஆய்ந்தறிந்த இவர், அதன்கண் மந்திர மென்பதன் இலக்கணத்தை உணர்த்தும்,

"நிறைமொழி மாந்த ராணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திர மென்ப"

என்னுஞ் சூத்திரத்தை,

"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்"

என்னும் குறளிலேகோத்து நன்கு அழகு படுத்தி யிருக்கின்றூர்.

புலவர்பால் அன்பு

இங்ஙனம் நிரம்பிய நூல்வல்லாராகிய திருவள்ளுவர் பிற புலவர்களிடத்தே அன்பு டையவராக இருந்தார். அவர்களோடு பழகுதலை இன்பமாகவும் அவர்களைப் பிரிதலைத் துன்பமாகவும் உணர்ந்தார்.

"உவப்பத் தலைக்கூடி யுள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்"

என்பதில் இக்கருத்தைக் காண்க. அவர்களுடைய பகை மிகக்கொடி தென்பதை,

"வில்லே ருழவர் பகைகொளினுங் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை"

என அறிவுறுத்துகின்றூர்.

வறுமைக் கொடுமை

புலவர்மாட்டு இத்தகைய பேரன்புடைய இப் பெரியார் அப் புலவர்பால் வறுமை குடி கொண்டிருத்தலை யறிந்து மிக வருந்தி இரங்கினர்.

" பொச்சாப்புக் கொல்லும் புகழை யறிவினை
நிச்ச நிரப்புக்கொன் றாங்கு"

என்பதில் வறுமையானது அறிவுடையார் அவ்வறிவினையும் மறந்தொழுகச் செய்யும் கொடுமையையுடைய தென்பதைக் குறிப்பிடுகின்றார். புலவர்கள் இங்ஙனம் இருக்கும் உலக இயல்பை,

" இருவே றுலகத் தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு"

என்று நொந்து கூறுகின்றார். அத்தகைய புலவர்களை இரந்துண்டு வாழவைத்த கொடுமையால்,

" இரந்து முயிர்வாழ்தல் வேண்டிற் பரந்து
கெடுக வுலகியற்றி யான்"

என்று பிரமனுக்குச் சாபங் கொடுக்கின்றார். இவருடைய வெறுப்பு முழுவதும்சேர்ந்து, 'இன்மை யெனவொரு பாவி' என்று வையும் பாட்டில் வெளிப்படுகின்றது.

அழுக்காற்றை வெறுத்தல்

வறுமையைப் பாவி யென்று வைதது போலவே அழுக்காற்றையும் பாவியென வெறுக்கின்றார்.

" அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும்''

என்று கூறுவதைக் காண்க. இதனால் பொறாமைக் குணத்தையும் இவர் அதிகமாக வெறுத்தாரென்று தெரிகிறது. உலகத்தினர் ஒருவரை இழித்துரைக்கும் போது 'துணிக்கும் பிண்டத்துக்கும் இல்லாமல் நாசமாகப் போகவேண்டும்' என்று வைகின்றார்கள். இதே வெறுப்போடு அழுக்காறுடையாரை,

" கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்ற முடுப்பதூஉம்
உண்பதூஉ மின்றிக் கெடும்''

என்று அழகிய மொழிகளால் இவர் திட்டுகின்றார். ஒழுக்கமில்லான்கண் உயர்வில்லை யென்பதற்கு அழுக்காறுடையான்கண் ஆக்க மிலாமையை உவமை கூறும்பொழுது இவருக்கு அதன்பாலுள்ள வைரம் நன்கு காணப்படுகின்றது. இது மட்டுமா? அறத்திற்குக் குறைபாடுகளென்று கூறும் நான்கனுள்,

" அழுக்கா றவாவெகுளி யின்னாச்சொல் நான்கும்
இழுக்கா வியன்ற தறம்''

என்று தெரிவிக்கையில் அழுக்காற்றை முதலிற் கூறி அதன் இழுக்கை மிகுதிப்படுத்திக் காட்டுகின்றார்.

சமற்காரம்

சமற்காரமாக நீதியைக் கூறும் இடங்கள் திருக்குறளில் பல **உண்டு:—**

" செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு "

என்பதில் ஒருவன் விருந்தோம்பி வாழ்வானாயின் அவனே இன்னும் சிறந்த நிலைமை யுடையாருக்கு விருந்தினனாவானென்று கூறும் முகத்தால் சுவர்க்கபோகத்தை அவன் பெறுதல் குறிப்பிக்கப் படுகிறது.

" கேட்பினுங் கேளாத் தகையவே கேள்வியாற்
றோட்கப் படாத செவி "

என்பதில் காதில் தொளையிருந்தும் பயனில்லை. மேலே கேள்வியால் தொளைக்கப் பட்டால்தான் அது மெய்த் தொளையாகும் என்று விளக்கும் வாயிலாகக் கேள்வியின் இன்றியமையாமையை உணர்த்துகின்றார்.

"கயவர் நன்றறிவாரைக் காட்டிலும் திருவுடையர்" என்று வள்ளுவர் கூறும்பொழுது, இது விபரீதமாக இருக்கின்றதே என்று வியப்படைகிறோம். அடுத்து, "நெஞ்சத்து அவல மிலர்" என்று முடிக்கும் போதுதான் திருவள்ளுவருடைய கருத்துப் புலப்படுகின்றது. இவருடைய சமத்காரத்தை வியக்கின்றோம்.

"தேவ ரனையர் கயவர்" என்று பொய்யில் புலவர் சொல்லும்போது 'தேவரை அலட்சியம் செய்கின்றாரா? அல்லது கயவரை உயர்த்துகின்றாரா?' என்று யோசனை செய்கின்றோம். 'அவரும் தாம் மேவனசெய் தொழுகலான்' என்று காரணம் காட்டும்போதுதான்

புலவருடைய புலமைத்திறன் மனத்தைக் கவர் கின்றது.

வேத வழக்கு

வேத வழக்கொடு இயைந்த பல செய்திகள் திருக்குறளில் உள்ளன. நித்திய நைமித்திக பூசைகள், நான்கு ஆச்சிரமம், ஐவகைக் கடன்கள், அந்தணர் முதலியோர் ஒழுக்கம், வேதம் முதலியவற்றைப் பற்றிய செய்திகள் பலவகையில் இணைக்கப் பட்டிருக்கின்றன.

திருமால் உலகளந்த செய்தியும் தாமரைக் கண்ணனுதலும் உணர்த்தப் படுகின்றன. திருமகளும் அவள் தவ்வையும் இணைத்துச் சில விடங்களில் கூறப்படுகின்றனர். 'தாமரையாள்' என்று திருமகளை ஓரிடத்திற் குறிக்கின்றார். பிரமதேவனை, 'உலகியற்றியான்' என்கின்றார். இந்திரனைப் பற்றி இரண்டிடங்களிற் கூறுகின்றார்.

இம்மை, மறுமை, வீடு என்னும் இம் மூன்றும் திருவள்ளுவர்க்கு உடம்பாடு. சுவர்க்கத்தைப் புத்தேளுலகமென்றும், மேலுலகமென்றும், வானமென்றும் கூறுவர்; தேவரை அவியுணவின் ஆன்றோரென்பர். இல்லறஞ் செய்தலின் பயன் சுவர்க்கத்தோடு நிற்குமென்பதும் துறவறமே வீட்டிற்குக் காரணமென்பதும் இவருடைய கொள்கை யென்று தோற்றுகின்றது. இல்லறம் புரிந்து பின் நெறி

யாகத் துறவறம் பூணுதலை, "ஒழுக்கத்து நீத்தார் பெருமை" என்னும் குறளால் அறிவிக்கின்றார்.

"வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை" என்று பிறவாமையையே தனி வேட்கையாகக் குறிக்கின்றார். மற்றீண்டு வாரா நெறி ஒன்று உண்டென்பதையும், அது துறவியர்களுக்குரிய தென்பதையும் தெளிவுறுத்துகின்றார்.

" யானெனை தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த வுலகம் புகும் "

என்பதில் சுவர்க்க போகத்தினும் உயர்ந்த வீட்டுலக முண்மையையும் அது துறவுள்ளத்தினார்க்கே எய்தலாவ தென்பதையும் உணர்த்துகின்றார். துறவின் சிறப்பு நோக்கியே, நீத்தார் பெருமையைப் பாயிரத்துட் கூறினாரென்று தோற்றுகின்றது.

சுவர்க்கத்தைப் பற்றிச் சொல்லும் இவர், நரகத்தைப் பற்றியும் சில இடங்களிற் சொல்லுகின்றார். அதனை இருள் சேர்ந்த இன்னாவுலகம் என்றும், ஆரிருள் என்றும், அளறு என்றும் குறிக்கின்றார்.

இல்வாழ்க்கை

இல்வாழ்க்கையைப் பற்றி இவர் கூறும் கருத்துக்கள் மிக அரியன. அவற்றின் திரண்ட பொருள், இல்வாழ்பவன் எல்லாவற்றையும் பிறர்க்கு உபகாரம் செய்வதற்கே பயன்படுத்த

வேண்டு மென்பதும், அவன் தன் உடலையும் பிறவற்றையும் பாதுகாத்தலும் அந்நோக்கத் திற்குத் துணையாக இருத்தல் வேண்டுமென் பதுமேயாம். இங்ஙனம் பிறர்க்குதவுதலே இல்லறத்துக்குச் சிறந்த கொள்கையென்பதை,

"இருந்தோம்பி யில்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு"

என்பதில் விளக்குகின்றார். தலைமை வகை யினால் இல்லறத்தைத் தானம் (கொடை) என்று குறிப்பித்தலும் இதனை வற்புறுத்தும்.

உழவு

பொருள் ஈட்டுவதற்குரிய தொழில்களுள் உழவும் வாணிகமும் தலைமையாவன. இவற் றில் உழவு மிகச் சிறந்தது. அதனைப்பற்றி இவர் கூறியது ஓர் அதிகாரமேனும் அதி லுள்ள கருத்துக்கள் ஒரு பெரிய நூற்கருத்துக் களைப் போன்ற சிறப்புடையன. உழவைப் பற் றிய செய்திகள் பல குறளில் அமைந்துள்ளன. இடும்பையைப் பொருட் படுத்தாமல் முயற்சி புரிபவரை "மடுத்தவா யெல்லாம் பகடன்னான்" என்றும், கம்பீரமான நடையை "ஏறுபோற் பீடுநடை" என்றும் கூறுவனவற்றுள் உழவர்க் குரிய பகட்டின் செய்திகள் வருகின்றன. அரசன் குற்றம் செய்தார்களை ஒறுத்தலுக்குப் பயிரிலுள்ள களையெடுத்தலை உவமை கூறுகின்றார். "இளைதாக முண்மரங் கொல்க"

என்று ஓரிடத்திற் சொல்லுகின்றார். "வளர் வதன் பாத்தியுள் நீர்சொரிந் தற்று" என்றும், "யாப்பினுள் அட்டிய நீர்", "ஊரவர் கௌவை யெருவாக வன்னைசொல், நீராக நீளுமிந் நோய்" என்றும் கூறுவனவற்றுள் நீர் பாய்ச்சும் தொழிலை உவமைப் படுத்துகின்றார். "தொட்ட னைத் தூறு மணற்கேணி", "இறைப்பவர்க், கூற்றுநீர் போல மிகும்", "குளவளாக், கோடின்றி நீர்நிறைந் தற்று" என்பவற்றில் நீர்நிலைகளைப்பற்றிய செய்திகள் வருகின்றன.

வாணிகம்

வாணிகத்தைப்பற்றிச் சில குறள்களே காணப்படுகின்றன. ஆயினும் உவமையாக வாணிக சம்பந்தமாகச் சில கருத்துக்களை வேறு இடங்களில் அமைக்கின்றார். பெரியாரைத் துணைக்கோடல் என்னும் அதிகாரத்தில்,

" முதலிலார்க் கூதிய மில்லை மதலையாம்
சார்பிலார்க் கில்லை நிலை"

என்றுள்ள குறளில் உவமைமுகத்தால் வாணிகக் கருத்தொன்றைக் கூறுகின்றார். தெரிந்து செயல் வகையென்னும் அதிகாரத்தில்,

" ஆக்கங் கருதி முதலிழக்குஞ் செய்வினை
ஊக்கா ரறிவுடை யார்"

என்று வாணிகச் சொற்களால் ஒரு குறளை அமைக்கின்றார்.

பின்னும், சமன்செய்து சீர்தூக்குங்கோல்,

அளக்குங்கோல், நீட்டி யளப்பதோர் கோல் என அளவு கருவிகளும் "தொடிப்புழுதி கஃசா வுணக்கின்" என நிறுத்தலளவைகளும் கூறப் படுகின்றன. தினை பனை யென்ற அளவுப் பெயர்கள் சிலவிடங்களில் வழங்கி வருகின் றன. சிறுமைக்கு ஓரிடத்தில் எட்பகவைக் கூறுகின்றார்.

பின்னும் விலங்குகளையும் பறவைகளையும் மரஞ் செடி கொடிகளையும் கைத்தொழிற் பொருள்களையும் பழக்கமாகிய பொருள்களை யும் சில வழக்கங்களையும்பற்றி இவர் கூறும் செய்திகளை ஆராய்ந்தால் மிக விரியும்.

தமிழ் வழக்கு

தமிழ் வழக்குக்களுள் அகப்பொருட் செய்திகள் காமத்துப் பாலிலும், புறத்துறை களிற் சில படைச்செருக்கென்னும் அதிகாரத் திலும் உள்ளன.

கற்புநெறி

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை"

என்பதிலுள்ள செய்திகள் தமிழ் நூல்களிற் பலவிடங்களிற் காணப்படுகின்றன. இக் குறள் கற்பின் உயர்வைத் தெரிவிக்கின்றது. தெய்வத்தைத் தொழாமையும் கணவனைத் தொழுதலுமாகிய இக்கற்பு நெறியை மணிமே கலை ஆசிரியர் மருதியென்னும் ஒரு தமிழ்

நாட்டுப் பெண்ணினது வரலாற்றில் விளக்கு கின்றார். காவிரிப்பூம் பட்டினத்திலிருந்த அவள் சிறந்த கற்புடை யாளானாலும் தெய்வ விழாவுக்குச் சென்று வழிபடுவதில் கருத்தைச் செலுத்தினதுபற்றி அவள் கற்புக்குச் சிறிது இழுக்கு நேர்ந்தது. அவளை அயலானொருவன் விரும்பித் தொடர்ந்தான். அதனால் தன் கற்புக்குக் குறைபா டுற்றமை யறிந்து பூத சதுக்கத்திற்போய் அரற்ற, அங்கேயுள்ள பூதம் அவள் கற்புக்குக் குறைவு நேர்ந்த காரணத்தை விளக்கிக் கூறியது.

> "தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
> பெய்யெனப் பெய்யும் பெருமழை யென்றவப்
> பொய்யில் புலவன் பொருளுரை தேராய்
> பிசியு நொடியும் பிறர்வாய்க் கேட்டு
> விசிபிணி முழவின் விழாக்கோள் விரும்பிக்
> கடவுட் பேணல் கடவியை யாகலின்
> மடவர லேவ மழையும் பெய்யாது
> நிறையுடைப் பெண்டிர் தம்மே போலப்
> பிறர்நெஞ்சு சுடூஉம் பெற்றியு மில்லை
> ஆங்கவை யொழிகுவை யாயி னாயிழை
> ஓங்கிரு வானத்து மழையுநின் மொழியது"

என்று அப்பூதம் கூறுவதாக அமைந்த பகுதியில் முற்கூறிய குறட்கருத்து விரிவாகக் காணப் படுவதோடு அக்குறளே மேற்கோளாக அமைந்திருத்தலுங் காண்க.

சிலப்பதிகாரத்திலுள்ள வரலாறு ஒன்று முற்கூறிய குறளின் முதற்பகுதியை

விளக்குகின்றது. தீக்கனைக்கண்ட கண்ண கியை நோக்கித் தேவந்தியென்பாள், "தீர்த் தத்தில் மூழ்கிக் காமவேளைக் கைதொழுதால் நலமுண்டாகும்" என்றாள். அப்பொழுது, கண்ணகி, "பீடன்று" என இருந்ததாகச் சிலப்பதிகாரம் கூறும். அப்பகுதிக்கு அடி யார்க்கு நல்லார் எழுதிய 'அங்ஙனம் துறை மூழ்கித் தெய்வந் தொழுதல் எங்கட்கு இயல்பன் றென்று சொல்லியிருந்த' என்ற உரையால் அவள் கூறியதன் காரணம் விளங்குகின்றது.

அகப்பொருளுக்குரிய துறைகளுள் ஒன்றாகிய 'பிறை தொழுகென்றல்' என்பதும் இக் கருத்தையே அடிப்படையாகக் கொண்டு எழுந்தது. ஒரு தலைவன்பால் அன்பு பூண்ட தலைவி யொருத்தியை அவள் அங்ஙனம் அன்பு கொண்டமையை அறிய விரும்பும் தோழி, "கன்னிமகளிர் பிறையைத் தொழுவர், நீயும் தொழுவாயாக" என்று காட்டுவாள். அப் பொழுது தலைவன்பால் அன்புபூண்ட கற் புடைய தலைவி அங்ஙனம் தொழுதல் தன் கற்பொழுக்கத்திற்குக் குறைவென்' றெண் ணித் தொழாள். அதனால் அவளது அன்பு நிலையைத் தோழி உணர்வாள்.

இசைச் செய்திகள்

இசைச் செய்திகளாகக் குறளில் உள்ளவை சில. "குழலினிதி யாழினி தென்ப" என்பதில்

குழலும் யாழும் சொல்லப்படுகின்றன. குழலின் பின்னர் யாழைவைத்த முறை அவற்றின் தோற்ற முறையையும், குழலின் பின் யாழ் வாசிக்கப்படும் மரபையும் பின் பற்றியது.

" குழல்வழி நின்றதி யாழே "

என்பது சிலப்பதிகாரம்.

யாழின்கோடு பயனற் செவ்வியதென்றும், கோவலர் மாலைக்காலத்தில் குழலூதுவரென்றும் சொல்லுகின்றார்.

" பண்ணென்னும் பாடற் கியைபின்றேற் கண்ணென்னும்
கண்ணோட்ட மில்லாத கண்"

என்றவிடத்துப் பண்ணுக்கும் பாட்டுக்கும் இருக்க வேண்டிய இயைபை வற்புறுத்துகின்றார்.

கூத்து

" கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கு மதுவிளிந் தற்று "

என்னும் குறள் நாடகத்தைப் பற்றியும், அதனைப் பார்க்கப் பெருங்கூட்டம் கூடுவதைப் பற்றியும், அது முடிந்தவுடன் அவர்கள் கலைந்து செல்வதைப் பற்றியும் தெரிவிக்கின்றது.

" மரப்பாவை நாணல் உயிர்மருட்டி யற்று",
" மரப்பாவை சென்றுவந் தற்று "

என்பவை பாவைகளை ஆட்டுவிக்கும் பாவைக் கூத்தை நினைந்து புகன்றவை யாகும்.

வைத்தியம்

திருவள்ளுவர் பெயரால் சில வைத்திய

நூல்கள் தமிழ் நாட்டில் உலவுகின்றன. இவர் அந்நூல்களை இயற்றவில்லையென்று ஆராய்ச்சியால் முடிவு கூறலாம். ஆயினும் இவர் மருத்துவத்தைப் பற்றிக் குறளிற் கூறும் உண்மைகள் மக்கள் வாழ்வுக்கு இன்றியமையாதன. மருந்தென்ற ஓரதிகாரம் குறளில் இருக்கிறது.

பசித்து உண்ணுதலும், அளவாக உண்ணுதலும் தேக சுகத்திற்கு முக்கியமானவை; இக்கருத்தை,

> " இழிவறிந் துண்பான்க ணின்பம்போல் நிற்கும்
> கழிபே ரிரையான்கண் நோய் "

என்று அழகாகக் கூறியிருக்கிறார். இதனைக் காட்டிலும் நன்றாகச் சொல்வார் யார்? வேறு அதிகாரங்களில் உள்ள சில செய்யுட்கள் இக் கருத்தை வற்புறுத்துகின்றன;

> " செவிக்குண வில்லாத போழ்து சிறிது
> வயிற்றுக்கு மீயப் படும் "

என்பதில் அளவோடு உண்பதையும்,

> " உணலினும் உண்ட தறலினிது காமம்
> புணர்தலின் ஊடல் இனிது "

என்பதில் பசித்து உண்டலையும் அறிவுறுத்துகின்றார்.

பசித்தபின் அளவறிந்து உண்பதால் நெடுங்காலம் வாழலாமென்பதை மருந்தென்னும் அதிகாரத்தில்,

> " அற்றால் அளவறிந் துண்க வஃதுடம்பு
> பெற்றான் நெடிதுய்க்கு மாறு "

என்று உணர்த்துகின்ருர். இங்ஙனம் தன் முயற்சியால் உடம்பை நெடிதுய்க்கு மாற்றை ஒருவன் அறிந்திருப்பினும் அவமிருத்யு தோஷத்தால் அவனுயிர் நீங்குமல்லவா? அதனினின்றும் மீட்சிபெற வேருெரு வைத்தியம் சொல்கின்ருர்:

"கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாண்
செல்லா துயிருண்ணுங் கூற்று" [மேற்

என்பதே அது. இவ்விரண்டு குறளையும் தொடர்பு படுத்திப் பார்க்கும்போது ஒருவன் தன் உடம்பையும் பிறவுயிரின் உடம்பையும் ஒருங்கே பாதுகாத்துவரின் நெடுங்காலம் வாழலாமென்பது இவர் கருத்தாகத் தோற்றுகிறது.

வாழ்த்து

தனக்கும் பிறர்க்கும் ஒருங்கே பயன்பட, உணவுண்டு வாழ்ந்து அறம் நடத்துதலைப் பற்றி வரையறுத்த இப்புலவர் பெருமானது நூல், இவர், தமக்கும் பிறர்க்கும் பயன்படும்படி கற்றறிந்து ஒழுகினரென்பதை நன்ருகத் தெரிவிக்கின்றது. பிறராற் செயற்கரிய செய்தவராகிய இப்பெரியார் புகழ் இன்னும் சிறப்பாக உலகத்தாரெல்லாருடைய உள்ளத்துள்ளும் உளதாகக் காணும் நாள் அண்மையில் இருக்கின்றதென்றே நான் நம்புகிறேன்.

திருக்குறள் வாழ்க! திருவள்ளுவர் புகழ் வாழ்க!

Printed at The Guardian Press, Ltd. 158-B. Broadway, Madras.

மகாமகோபாத்தியாய

டாக்டர். உ. வே. சாமிநாதையரவர்கள் எழுதிய

வசன நூல்கள்

			ரூ.	அ.
1.	புத்த சரித்திரம், பௌத்த தருமம், பௌத்த சங்கம்	....	0	12
2.	மணிமேகலைக் கதைச் சுருக்கம்	....	0	10
3.	பெருங்கதையின் கதாநாயகனுகிய உதயணன் சரித்திரச் சுருக்கம்	....	1	0
4.	மீனுட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம், முதற் பாகம்	....	2	0
5.	ஷை. ஷை. இரண்டாம் பாகம்	....	2	0
6.	நான் கண்டதும் கேட்டதும்; 12 சிறு வரலாறுகள் அடங்கியது	....	0	6
7.	புதியதும் பழையதும்; 20 சிறு வரலாறுகளின் தொகுதி	....	0	9
8.	கனம் கிருஷ்ணையர் சரித்திரம்—அவர் இயற்றிய கீர்த்தனைகளுடன்	....	0	8
9.	கோபாலகிருஷ்ண பாரதியார் சரித்திரம்—அவர் இயற்றிய தனிக் கீர்த்தனைகளுடன்	....	0	8
10.	மகா வைத்தியநாதையர் சரித்திரம்			

கிடைக்குமிடம்:— **தியாகராஜ விலாசம்**

பிள்ளையார் கோயில் தெரு, திருவேட்டீசுவரன்பேட்டை,

திருவல்லிக்கேணி, சென்னை.